**P.S.V. COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY**

(Approved by AICTE, New Delhi and Affiliated to Anna University, Chennai)

(An ISO 9001:2008 Certified Institution)

Mittapalli, Balinayanapalli Post, Krishnagiri - 635 108

**Dinakaran Tamil New Paper – 24.11.2021**

# தேசிய மாணவர் படை முகாமில் பிஎஸ்வி கல்லூரி மாணவர் சாதனை



தேசிய மாணவர் படையினருக்கான சிறப்பு முகாம் திருச்செங்கோட்டில் நடைபெற்றது. இதில், துப்பாக்கி சுடுதல் போட்டியில் பதக்கம் வென்ற பிஎஸ்வி பொறியியல் கல்லூரி மாணவருக்கு பதக்கம் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி, நவ.24: நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் உள்ள செங்குந்தர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் தேசிய மாணவர் படையினருக்கான சிறப்பு முகாம் ஒரு வாரம் நடைபெற்றது.

இம்முகாமில் கிருஷ்ணகிரி பிஎஸ்வி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் தேசிய மாணவர் படை வீரர்கள் கலந்து கொண்டனர். இதில், மாணவர் நந்தா கிஷோர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் பதக்கம் வென்றார். மேலும், சிறந்த என்சிசி மாணவராக தீபக்ராஜேஷ் தேர்தெடுக்கப்பட்டார். அனைத்து மாணவர்களுக்கும் ஒரு வார தேசிய முகமையில் கலந்து கொண்டதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. அவர்களுக்கு கல்லூரியின் தாளாளர் டாக்டர் செல்வம் பாராட்டு தெரிவித்தார். நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலாளர் டாக்டர் விவேக், முதல்வர் லாரன்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை கல்லூரியின் தேசிய மாணவர் படை ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சினிவாசன் செய்திருந்தார்.